**அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியம் ஆலங்குடி ஊராட்சி புல எண் 435-1,2pt ல் அமைந்துள்ள 85340 சதுர அடி பரப்பளவு மனைப்பிரிவு தீர்மான விபரம்**

கட்டணம் செலுத்தப்பட்டது

1. கூராய்வு கட்டணம்

**இணையதள கட்டண பதிவு எண் JHMP5761807058 நாள் 24.10.17**

**www.layoutreg.tn.nic ல் ரு 14500 /- 29 மனைக்கட்டுகளுக்கு செலுத்தப்பட்டுள்ளது.**

2. வரன்முறை கட்டணம்

**அரசுத்கணக்கு தலைப்பு 021760800AT0007 ல் 12.03.18 அன்று ரு .1,31,610/- செலுத்தப்பட்டுள்ளது**

3. வளர்ச்சி கட்டணம்

**ஆலங்குடி ஊராட்சிக்காக மாவட்ட ஆட்சியரின் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கணக்கு எண் 37840100000322ல் ரு. 1,09,675/- 12.03.2018 அன்று செலுத்தப்பட்டது**

தஞ்சாவூர் உறுப்பினர் செயலர் (பொ) உள்ளூர் திட்டக் குழுமம் அவர்களின் கடித எண் 2007/17 தம3 நாள் 11.01.18 படி நி.அ எண் 435/1,2pt ல் 85340 சதுர அடியில் அமைந்துள்ள 34 மனைப்பிரிவிற்கு அரசாணை எண் 78 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வசதி துறை நாள் 04.05.2017 மற்றும் அரசாணை எண் 172 வீட்டு வசதி மற்றும் நகர்புற வசதி துறை நாள் 13.10.2017ன் படி தஞ்சாவூர் மண்டல நகர் ஊரமைப்பு துணை இயக்குநருக்கு அனுமதிக்கு அனுப்பப்பட்டு கொ.ஓ.ம.வ ந.ஊ.து.இ (தம) எண் 01/ 2018 என்று கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்டதை தொடர்ந்து ஆலங்குடி ஊராட்சி மன்ற தீர்மான எண் 64 நாள் 12.4.2018 படி தீர்மானம் இயற்றப்பட்டு மனைப்பிரிவு அங்கீகரிக்கப்படுகிறது.

தனி அலுவலர்- ஆலங்குடி ஊராட்சி/
வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ)
அம்மாபேட்டை

12/4/18

பெறுதல்

திரு.எஸ் அப்துல்லா,
எம் சிராஜுதீன் ,
எண் 1, சீராஜுதீன் நகர், பெரியசாலை ரோடு,
கீழவாசல், தஞ்சாவூர்.

நகர் ஊரமைப்பு துணை இயக்குனர்,(பொறுப்பு), தஞ்சாவூர் மண்டலம்,
தஞ்சாவூர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை:- திரு.சு.சங்கரமூர்த்தி,பி.இ.,

நடவடிக்கை கடிதம் எண்.2007/2017 தம3 நாள்: 11.01.2018

பொருள்: அனுமதியற்ற மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் – நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் அலுவலகம், தஞ்சாவூர் மண்டலம் - தஞ்சாவூர் மாவட்டம் - பாபநாசம் வட்டம் - அம்மாப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் - ஆலங்குடி ஊராட்சி மற்றும் கிராமம் – பிராந்தை சிறு கிராமம் - நி.அ.எண்கள்: 435/1,2pt-ல் 65340.00ச.அடி பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவுக்கு கொள்கையளவில் ஒப்புதல் அளித்து – உத்தரவிடப்படுகிறது.

பார்வை:
1. மனுதாரர் திரு.S.அப்துல்லா, அவர்களின் விண்ணப்பம் நாள்: 13.11.2017
2. அரசாணைஎண்: 78, வீட்டுவசதிமற்றும் நகர்ப்புறவளர்ச்சித் துறை நாள்: 04.05.2017
3. அரசாணை எண்.172, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை நாள்: 13.10.2017
4. நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்: 13193/2017/LA1 நாள்: 03.11.2017

—

உத்தரவு:-

பார்வை 1-ல் கண்ட மனுதாரர் கடிதத்துடன் பெறப்பட்ட அனுமதியற்ற குடியிருப்பு மனைப்பிரிவு வரன்முறைப்படுத்துதல் தொடர்பான விண்ணப்பம் மற்றும் இணைப்புகள் பரிசீலிக்கப்பட்டு உத்தேச அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு கொள்கையளவில் ஒப்புதல் அளித்து உத்தரவிடப்படுகிறது.

பார்வை (3)ல் கண்டுள்ள அரசாணையின் படியும், பார்வை (4)ல் கண்டுள்ள சுற்றறிக்கையின் படியும், உத்தேச அனுமதியற்ற மனைப்பிரிவில் அமையும் மனைகளுக்கு மனைப்பிரிவு அபிவிருத்தியாளர் கூராய்வு கட்டணமாக மனை ஒன்றுக்கு ரூபாய்.500/-வீதம் இணையதளம் மூலம் விற்பனை செய்யப்படாத மனைகளுக்கு மட்டும் செலுத்தப்பட்டுள்ளதனை தொடர்ந்தும், உத்தேச மனைப்பிரிவிற்கு நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெறப்பட்டதனை தொடர்ந்தும்,மனைப்பிரிவு வரைபடத்திற்கு **கொ.ஒ.ம.வ./ந.ஊ.து.இ.(த.ம)எண்:01/2018** என எண்ணிடப்பட்டு கீழ்க்காணும் நிபந்தனைகளுடன் கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட இரண்டு வரைபட நகல்கள் இத்துடன் இணைத்து வட்டார வளர்ச்சி அலுவலர், அம்மாப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

அ) கூராய்வு கட்டணம்:

பார்வை (2)ல் கண்ட அரசாணை விதி எண்: 12-ன் படி, விற்பனை செய்யப்படாத மனைகளுக்கு கூராய்வு கட்டணம் இணையதளம் மூலம் செலுத்தப்பட்டுள்ளது. மேலும், விற்பனை செய்யப்பட்ட மனைகளுக்கு மனை உரிமையாளர் கூராய்வு கட்டணமாக மனை ஒன்றுக்கு ரூபாய்.500/-ஐ இணையதளம் மூலம் செலுத்தப்பட்டு பெறப்பட்ட பின்னரே வட்டார வளர்ச்சி அலுவலர், அம்மாப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் அவர்கள் மனைகளை வரன்முறைப்படுத்தப்பட வேண்டும்.

ஆ)வரன்முறைக்கட்டணம்:

பார்வை (2)ல் கண்ட அரசாணை விதி எண். 9-ன் படி சதுர மீட்டருக்கு ரூ.30/- என ஒவ்வொரு மனைக்கும் அதன் மொத்தப் பரப்பளவிற்கு கணக்கீடு செய்து தொகையினை கீழ்க்கண்ட அரசு கணக்கு தலைப்பில் செலுத்தப்பட்ட, பின்னரே மனைப்பிரிவினை வரன்முறைப்படுத்தப்பட வேண்டும். (உதாரணமாக, 139.35ச.மீ பரப்பளவுள்ள மனை எண்: 14—க்கான வரன்முறைக் கட்டணம் =139.35 X 30 = ரூ. 4181/-ஆகும்).

**Head Of Account:**

**0217 Urban Development**
**60 Other Urban Development Schemes**
**800 Other Receipts**
**AT Receipts under Regularistion Charges of Unapproved Layouts and Plots –DTCP**
**(DPC: 0217 60 800 AT 0007)**

இ).வளர்ச்சிக் கட்டணம்:

பார்வை (3)ல் கண்ட அரசாணை விதி எண்: 10–ன் படி சதுர மீட்டருக்கு ரூ. 25/- என ஒவ்வொரு மனைக்கும் அதன் மொத்தப் பரப்பளவிற்கு கணக்கீடு செய்து, வசூல் செய்து தொகையினை உள்ளாட்சி தனியாக கணக்கு தொடங்கி, அக்கணக்கில் செலுத்தப்பட்டதனை உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும். (உதாரணமாக, 139.35ச.மீ பரப்பளவுள்ள மனை எண்: 14—க்கான வளர்ச்சிக்கட்டணம் =139.35X 25 = ரூ.3484/-ஆகும்).

ஈ).திறவெளி ஒதுக்கீடு:

பார்வை (3)ல் கண்ட அரசாணையின் படி விற்பனை செய்யப்படாத மனைகளுக்கு கீழ்க்கண்டவாறு பூங்கா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(i) மனைப்பிரிவின் மொத்தப் பரப்பளவு: 65340.00ச.அடி

(ii) விற்பனை செய்யப்படாத மனைகளின் பரப்பு: 52518.10ச.அடி

(iii) விற்பனை செய்யப்படாத மனைகளுக்கு தேவையான பூங்கா பரப்பு: 5251.81ச.அடி (10.0%)

(iv) ஒப்படைப்பு செய்யப்பட வேண்டிய பூங்கா பரப்பு= 5301.50 (10.03%)

(v) மனைகள் விற்பனை செய்யப்பட்ட விபரம்:

மனை எண்கள்: 29, 30=02nos.

II.நிபந்தனைகள்:

1. இந்த மனைப்பிரிவு அமையும் நிலத்தின் மீது எந்தவித நில கையகப்படுத்தும் நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும், எந்தத் துறைக்காகவும் நிலம் நிலகையகப்படுத்துவதற்கான பட்டியலில் சேர்த்து அனுப்பப்படவில்லை எனவும், நிலமானது தமிழ்நாடு நகரப்புற நில உச்சவரம்புச் சட்டம் மற்றும் நில சீர்திருத்தச் சட்டங்களின் கீழ் கவரப்படவில்லை எனவும்,வட்டார வளர்ச்சி அலுவலர், அம்மாப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் அவர்களை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

2. உள்ளாட்சிகளின் சட்டம் மற்றும் அரசாணைகளின் படி மனைப்பிரிவு சாலைகளை தானமாகப் பெற்று அல்லது நிலையில் உள்ள வழிகாட்டுதலின் படி மனைப்பிரிவு சாலைகளை தன்னிச்சையாக உள்ளாட்சி உரிமை மற்றும் பராமரிப்பிற்கு எடுத்துக்கொண்டதற்கான விவரம் இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்க வேண்டும். மேலும், மனைப்பிரிவிற்கு அமையும் அணுகுசாலை பொதுசாலையாக உள்ளதா என்பதனை உள்ளாட்சி உறுதி செய்த பின்னரே வரன்முறைப்படுத்தப்பட வேண்டும்.

3. இந்த கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவின், சாலைகள் மற்றும் திறவிட ஒதுக்கீடுக்கான நிலங்களை உள்ளாட்சி பெற்றுக்கொண்டதற்கான அல்லது உள்ளாட்சி வசம் எடுத்துக் கொண்டதற்கான பத்திரம் மற்றும் ஆவணங்களை வருவாய்துறை ஆவணங்களில் பதிவு செய்யும் பொருட்டு சம்மந்தப்பட்ட வட்டாட்சியருக்கு அனுப்பப்பட வேண்டும்.

4. இந்த மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட கொள்கை அளவிலான ஒப்புதல் மூலம் மனைப்பிரிவில் அமையும் தனி மனைகளையும் வரன்முறைப்படுத்தப்பட்டதாக எடுத்துக் கொள்ளக்கூடாது.

5. நில உரிமம் குறித்து உறுதி செய்யும் பொறுப்பு உள்ளாட்சியையே சார்ந்ததாகும்.

6. விதி எண்:16-ன் படி உள்ளாட்சி தனியாக ஒரு கணக்கு தொடங்கி இந்த மனைப்பிரிவு வரன்முறைத்திட்டத்தின் கீழ் வசூல் செய்யப்படும் வளர்ச்சிக் கட்டணங்களை அதில் செலுத்தி, பராமரித்து வர வேண்டும்.

7. மனைப்பிரிவில் காண்பிக்கப்பட்டுள்ள மூலைமுடக்கு நிலப்பரப்பினை சம்மந்தப்பட்ட மனை உரிமையாளர் மனை வரன்முறைப்படுத்தக் கோரும் போது, மனை உரிமையாளரிடம் இருந்து உள்ளாட்சிக்குத் தானமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

8. அரசாணை விதி 4-ல் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் எவையும் இந்த மனைப்பிரிவுக்குப் பொருந்தாது அல்லது கட்டுப்பாடுகளின் கீழ் வராது என்பதனை வட்டார வளர்ச்சி அலுவலர், அம்மாப்பேட்டை ஊராட்சி ஒன்றியம் அவர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

9. கூராய்வு கட்டணம், வரன்முறை கட்டணம் மற்றும் வளர்ச்சி கட்டணம் இவைகளை மனுதாரரியிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதனை உறுதி செய்த பின்னர் தனிமனைகளை உள்ளாட்சி வரன்முறை செய்து கொடுக்க வேண்டும். தனி மனைகளை வரன்முறைப்படுத்தப்பட்ட விபரம் இவ்வலுவலகத்திற்கு தெரியப்படுத்த வேண்டும்.

10. பார்வை (4)ல் தெரிவிக்கப்பட்ட சுற்றறிக்கையின் படி கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவில் அமையும் சாலை, மூலைமுடக்கு மற்றும் பூங்கா பகுதிகள் உள்ளாட்சிக்கு உரிமையாகும் வகையில் பதிவு செய்ய சம்மந்தப்பட்ட சார்பதிவாளர், பதிவுத்துறை நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட வேண்டும். ஏனெனில் இத்திட்டத்தின் கீழ் மேற்கண்ட திறவிடங்கள் உள்ளாட்சி வசம் ஏற்றுக்கொள்ளப்பட்டதாக கருதப்படும் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

11. பார்வை (4)ல் தெரிவிக்கப்பட்டவாறு சுற்றறிக்கையின் படி கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவில் அமையும் சாலை, பொது ஒதுக்கீடு மற்றும் பூங்கா பகுதியினை உள்ளாட்சிக்கு உரிமையாகும் வகையில் சம்பந்தப்பட்ட உதவி இயக்குநர், நில அளவை மற்றும் நில பதிவேடு துறை அவர்கள் உட்பிரிவு செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

12. பார்வை (4)ல் தெரிவிக்கப்பட்ட சுற்றறிக்கையின் படி கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவில் அமையும் சாலை, பொது ஒதுக்கீடு மற்றும் பூங்கா பகுதியினை சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்பு, சார்பதிவாளர், பதிவுத்துறை, வட்டாட்சியர் மற்றும் உதவி இயக்குநர், நில அளவை மற்றும் நில பதிவேடு துறை ஆகியோருடன் ஒருங்கிணைந்து பத்திரப்பதிவு மற்றும் உட்பிரிவு செய்து வருவாய் ஆவணங்களில் உள்ளாட்சிக்கு உரிமையாகும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அதன் விபரத்தினை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

| கொள்கையளவில் ஒப்புதல் வழங்கப்பட்ட மனைப்பிரிவின் ஒதுக்கீடு விபரம் | பரப்பளவு | விழுக்காடு |
|---|---|---|
| மனைப்பிரிவுஇடத்தின்பரப்பளவு | 65340.00ச.அடி | -- |
| ஒதுக்கிய மனைகள் | 35 | -- |
| பூங்கா | 5301.50ச.அடி | 10.09% |

நகர் ஊரமைப்பு துணை இயக்குனர் (பொறுப்பு),
தஞ்சாவூர் மண்டலம், தஞ்சாவூர்.

பெறுநர்:
வட்டார வளர்ச்சி அலுவலர்,
அம்மாபேட்டை ஊராட்சி ஒன்றியம்,
தஞ்சாவூர் மாவட்டம். — இரண்டு வரைபட தொகுப்புகள்

நகல்:
1. சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
கரந்தட்டான்குடி,
திருவாரூர் மாவட்டம். — ஒரு வரைபட தொகுப்பு

2. உதவி இயக்குநர்,
நில அளவை பதிவேடு துறை,
மாவட்ட ஆட்சியரகம்,
தஞ்சாவூர் மாவட்டம். — ஒரு வரைபட தொகுப்பு

3. வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
பாபநாசம் வட்டம்,
தஞ்சாவூர் மாவட்டம். — ஒரு வரைபட தொகுப்பு

நகல்:
திரு.[illegible],
த/பெ.M.சிவராஜேந்திரன்,
நெ.1, சிவராஜேந்திரன் நகர்,
கீழவாசல்,
தஞ்சாவூர்

அலுவலக முகவரி
நகர் ஊரமைப்பு துணை இயக்குனர்
அலுவலகம், தஞ்சாவூர் மண்டலம்
எண் 33, ராஜேந்திரம் நகர் 4வது தெரு,
மருத்துவக் கல்லூரிச் சாலை,
தஞ்சாவூர் - 613 007
மின் அஞ்சல்: ddtjrregion@gmail.com